
ஓம்!

# லக்ஷ்மி அஷ்டோத்ரம் கற்பனை கலந்த தமிழாக்கம்



ஓம்

மாறாத இயற்கை வடிவமே போற்றி
வேறாகும் விதவித மாயையே போற்றி
வித்தைகள் அரசியான அறிவே போற்றி
சத்தியமாய் இதங்களை அளிப்பவளே போற்றி
நம்பிக்கை உருவமான நாயகி போற்றி
கும்பிடும் மக்களின் குணங்களே போற்றி
பொங்கும் தேவகுண தேவியே போற்றி
எங்கும் இருக்கும் எழிலே போற்றி
இனிக்கும் மொழியான தேனே போற்றி
பனிக்கஞ்சியில் அமர்ந்த பாவையே போற்றி (10)

செங்கமல கருணை நாயகியே போற்றி
எங்கும் நிறைந்த தூய்மையே போற்றி
மங்கள வடிவான மகாலக்ஷ்மி போற்றி
எங்களைக் காக்கும் சக்தியே போற்றி
அழிவே இல்லாத அமுதமே போற்றி
செழிக்கும் குணமான நன்றியே போற்றி
பொன்னிற மேனியளாம் பூதேவி போற்றி
பொன்னைப் பொழியும் அன்னையே போற்றி
தினமும் அடையும் வலிமையே போற்றி
மனதை மயக்கும் பிரகாசமே போற்றி (20)

சக்தியாய் மின்னும் செங்கதிரே போற்றி
பக்தரின் கோரிக்கை அருள்பவளே போற்றி
தீபத்தின் ஜோதி வடிவமே போற்றி
சோபிக்கும் பூமித் தாயே போற்றி
பூமியின் பாரத்தை தாங்குபவளே போற்றி
தாமரை வடிவின் அழகே போற்றி
கவர்ந்திடும் காந்தனின் அரசியே போற்றி
கவர்ந்திடும் அழகான இறையே போற்றி
பாற்கடலில் தோன்றிய பாவையே போற்றி
கோரிக்கைகளை நடத்தும் கோமாதா போற்றி (30)

புரிய வைக்கும் புத்தியே போற்றி
அறவே மாசுகள் அற்றவளே போற்றி
கவர்ந்திடும் காந்தனின் நாயகியே போற்றி
அவதியான சோகத்தை அழிப்பவளே போற்றி
வழியும் இனிய தேனமுதே போற்றி
வழிகாட்டும் தீபத்தின் ஒளியே போற்றி
கருமத்தின் உபாதை ஒழிப்பவளே போற்றி
தருமத்தின் நிலையான திடமே போற்றி
கருணை கசியும் விழிகளே போற்றி
அருளும் உலக அன்னையே போற்றி (40)

கமலத்தை விரும்பும் காரிகையே போற்றி
கமலம் போன்ற கரங்களுடையவளே போற்றி
கமல விழிகளின் காருண்யமே போற்றி
கமலத்தின் வடிவமான பேரழகியே போற்றி

கமலத்தில் வெளிப்பட்ட கலையே போற்றி
கமல முகமுடைய கனிவே போற்றி
கமலநாபன் காதல் நாயகியே போற்றி
கமலனின் ரம்மிய ராணியே போற்றி
கமலமாலை அணிந்த கல்வியே போற்றி
கமலகுண திவ்யமான தேவியே போற்றி (50)

தாமரை மலரின் தனமே போற்றி
தாமரை மலரின் வாசமே போற்றி
புண்ணிய செயல்களின் இருப்பே போற்றி
கண்ணில் பூரிப்புடைய கருணையே போற்றி
வரங்களை அருளும் வலிமையே போற்றி
கரங்களில் ஒளிமிகுந்த கதிரே போற்றி
நிலவின் முகமுடைய நிம்மதியே போற்றி
நிலவின் குளிர்ந்த நிழலே போற்றி
நிலவின் உடன்பிறந்த நிச்சலனமே போற்றி
நலமான நாற்கர நாயகியே போற்றி (60)

சந்திர வடிவான சத்தியமே போற்றி
இந்திர உணர்வான இயற்கையே போற்றி
குளிர்ந்த சாத்திர குணமே போற்றி
அளிக்கும் மகிழ்ச்சி அன்னையே போற்றி
திடமான வாழ்வின் திறமே போற்றி
இடத்தின் மங்கள இருப்பே போற்றி
மங்கள நிலையின் மூலமே போற்றி
எங்கும் பரவிய உண்மையே போற்றி
பொங்கும் தூய உணர்வே போற்றி
தங்கு தடையில்லா தாரணியே போற்றி (70)

செறிவான வாழ்வின் செழிப்பே போற்றி
தரித்திரம் ஒழிக்கும் தனமே போற்றி
பிரியமான விழிகளின் பிரகாசமே போற்றி
விரியும் அமைதியின் வியப்பே போற்றி
வெள்ளை மாலையின் வெண்மையே போற்றி
அள்ளிடும் அருளான அதிருஷ்டமே போற்றி
வீசிடும் கதிரவன் ஒளியே போற்றி
பேசிடும் வில்வத்தின் இலையே போற்றி

வரங்களை வழங்கும் வளமே போற்றி
பரவிய புகழைுடைய பரவசமே போற்றி (80)

புவனத்தின் மகளான பொறுமையே போற்றி
அவனியின் செழுமை அழகே போற்றி
அழகிய மானின் அதிசயமே போற்றி
எழிலான பொன்னிற மாலையே போற்றி
வளமான நிலத்தின் தானியமே போற்றி
உளமார வாழ்த்தும் உண்மையே போற்றி
பெண்களைக் காக்கும் பெருமையே போற்றி
மண்ணில் மங்களம் அருள்பவளே போற்றி
செல்வத்தின் இருப்பான செழுமையே போற்றி
சொல்லில் வரமருளும் வரத்திருமகளே போற்றி (90)

வளங்களை அருளும் வசீகரமே போற்றி
உளத்தில் மங்களம் உருவாக்குபவளே போற்றி
பொன்னிற அழகின் பூரிப்பே போற்றி
வெண்ணிற பாற்கடலின் வெளிப்பாடே போற்றி
வெற்றியின் இருப்பிட வீரியமே போற்றி
உற்றவர் உற்சாக மங்களமே போற்றி
விஷ்ணுவின் இதய நாயகியே போற்றி
விஷ்ணுவின் மனை மங்கையே போற்றி
இனிமையின் இதமான இருவிழியே போற்றி
கனிவுடன் நாரயணனை இணைந்தவளே போற்றி (100)

வறுமையை அறவே ஒழிப்பவளே போற்றி
அருமையுடன் அருளும் அலைமகளே போற்றி
தடையான தொல்லையைத் தொலைப்பவளே போற்றி
விடையான ஒன்பது சக்திகளே போற்றி
கழுகாய் காக்கும் காளியே போற்றி
முழுமுதல் மூர்த்திகளின் மூலமே போற்றி
முக்காலம் உணர்ந்த பூரணமே போற்றி
எக்கால புவனத்தின் ஈஸ்வரியே போற்றி (108)

வேறு
சங்காய் முழங்கும் சாத்திரமே போற்றி
மங்களம் அருளும் மகாலக்ஷ்மி போற்றி
செங்கமல சுந்தரித் தாயாரே போற்றி

எங்கமலத்தில் அமர்ந்த எழுத்தே போற்றி
அன்னை வழிவந்த அருளமதே போற்றி
என்னை எழுதவைத்த தமிழே போற்றி
குழையும் கருணையைப் பொழிவாய் போற்றி
பிழைகளை பொறுத்து அருள்வாய் போற்றி
வரத்திருமகள் எழுதிய பாமாலையே போற்றி
கரங்கூப்பி சாற்ற ஏற்பாய் போற்றி
🙏🙏🙏🙏🙏🙏🙏🙏🙏🙏

மகாலக்ஷ்மி அர்ச்சனை அகவல்

அன்னையே
ஆதரவே
இயற்கையே
ஈஸ்வரியே
உண்மையே
ஊர்ஜிதமே
எழிலே
ஏற்றமே
ஐஸ்வர்யமே
ஒளியே
ஓங்காரமே
கமலமே
காருண்யமே
குறையில்லா குணமே
சத்தியமே
சந்தானமே
செழிப்பே
செங்கமலமே
தனமே
தானியமே
திருமகளே
தீபமே
துல்லியமே
தூய்மையே
தெளிவே

தேவியே
நலமே
நாயகியே
நிம்மதியே
நேர்மையே
பரிமளமே
பாற்கடலே
பிரகாசமே
புத்தியே
புகழே
பூதேவியே
பெருமையே
பேரின்பமே
மங்களமே
மாயையே
மிளிர்வே
முழுமுதலே
வரமே
வளமே
வாசமே
விசாலமே
வீரமே
வெற்றியே
தேரழுந்தூர் தாயரே
தேவாதிராஜன் நாயகியே
செங்கமல வல்லியே போற்றி போற்றி!

ஆண்டாள் அஷ்டோத்திர நாமாவளி

மார்கழி துளசியே
வையத்து மதியே
ஓங்கிய பாசுரமே
ஆழிமழை ஆனந்தமே
மாயனின் மங்கையே
புள்ளும் சிலம்பே
கீசு கீசு கிளியே

கீழ்வான சிவப்பே
தூமணி ஒளியே
நோன்பு நாயகியே

கற்றவர் தமிழே
கனைத்த இளங்கன்றே
புள்ளிக்கோல அழகே
செங்கமல மலரே
எல்லே இளங்கிளியே
எங்கள் இளவரசியே
அம்பரமே அழகே
ஆடிப்பூர ஆண்டாளே
விஷ்ணுசித்தர் மகளே
வில்லிபுத்தூர் குத்துவிளக்கே

முப்பதும் செப்பியவளே
அரங்கன் நாயகியே
அணையா ஜோதியே
அன்றும் இன்றுமே
நாச்சியார் மொழியே
சூடிக்கொடுத்த சுடரே
கூடாரவல்லியே
கோவிந்தன் தோழியே
சிற்றஞ் சிறுகாலே சேவிப்பேனே
வங்கக்கடல் நாயகியே போற்றி போற்றி!

அனுமன் துதி நாற்பது

ஞானக் கடலே
வானரத் தலைவனே
ஒய்யார தூதனே
ஒப்பில்லா ஆற்றலே
அஞ்சலி புதல்வனே
வீரத்தின் திலகமே
வெற்றியின் வைரமே
ஒளிரும் நல்லெண்ணமே
பொன்னிற தோற்றமே

செந்நிற குண்டலமே

சுருண்ட கேசமே
திரண்ட தோள்களே
உரமான உறுதியே
உறுதுணை கொடியே
சங்கரன் அவதாரமே
வாயுவின் மகனே
வித்தையில் சிறந்தவனே
சத்திய சீலனே
சுருக்கியே உடலே
பெருகியே அழிக்குமே

ஆதிசேஷ அவதாரமே
ஆவேசம் பூண்டவனே
இலங்கைக்கு சென்றவனே
இலக்குவனை மீட்டவனே
சஞ்சீவி சுமந்தவனே
சரித்திரம் படைத்தவனே
பரவிய புகழே
பாதையைக் காட்டியவனே
சுக்ரீவன் நண்பனே
சுந்தர நாயகனே

விபீடணன் தோழனே
வீரியம் உடையவனே
கோதண்டன் கணையாழியே
கொண்டதை சேர்த்தவனே
கடினத்தை வெல்பவனே
காவியம் படைத்தவனே
பயத்தைக் கொல்பவனே
ஜெயத்தை அருள்பவனே
மாவீரன் அனுமனே
மனதினுள் நின்றவனே

நோயைக் கொல்பவனே
மாயை வெல்பவனே
சிந்தையில் இராமனே

எந்தை அனுமனே
சங்கடம் தீர்ப்பவனே
சித்திகள் கொண்டவனே
நல்லவரைக் காப்பவனே
அல்லவரை அழிப்பவனே
மக்களின் நேசனே
மன்னவன் தோழனே

அனுமனே ஆஞ்சநேயனே போற்றி! போற்றி!